போர்ட் ஸெயின்ட் ஜார்ஜ் கெஜெட்

IV-வது பாகத்தின் ஸப்ளிமென்ட்

SUPPLEMENT TO PART IV OF THE FORT ST. GEORGE GAZETTE,

JANUARY 16, 1923.

நெ. 1(1).] மதராஸ் : செவ்வாய்க்கிழமை மாலை, 1923-ம்௵ ஜனவரி௴ 16௳. [விலை, 3 பை.

சென்னை கவர்ன்மென்ட் மசோதா ஆக்ட்

BILL OF THE GOVERNMENT OF MADRAS.

சட்டதிட்டங்கள் செய்வதற்கான சென்னபட்டணம் கவர்னரவர்களின் ஆலோசனை சபையில் கொண்டுவரப்போகும் மசோதா ஆக்டுகள்.

சென்னைச் சட்டநிரூபண சபையில் வேலை நடந்தேறுவதைக்குறித்த விதிகளைச் சேர்ந்த 18-வது விதியின்படி, அடியிற்கண்ட மசோதா ஆக்டும் அதன் ஹேதுக்களும் நோக்கங்களும் அடங்கிய சூசிகையும் அதன் பகுதிகளைப்பற்றிய குறிப்புகளும் யாவர்க்கும் தெரியும்படி பிரசித்தஞ்செய்யப்படுகின்றன :—

BILL No. 1 OF 1923.

1923-ம்௵த்து 1-ம்கூ. மசோதா ஆக்ட்.

A BILL TO AMEND THE MADRAS STAMP (AMENDMENT) ACT, 1922.

1922-ம்௵த்திய சென்னபட்டணத்து முத்திரைக் கடுதாசி (திருத்துவதற்கான) ஆக்டைத் திருத்துவதற்கான மசோதா ஆக்ட்.

1922-ம்௵த்திய சென்னபட்டணத்து முத்திரைக் கடுதாசி (திருத்துவதற்கான) ஆக்டைத் திருத்துவது யுக்தமாயிருக்கிறபடியாலும், இந்த ஆக்டை ஜாரிசெய்வதற்கு இந்தியா கவர்ன்மென்டுக்குச் சம்பந்தப்பட்ட ஆக்ட் 80-A பிரிவைச் சேர்ந்த (3) குறிப்பிட்ட உட்பிரிவின்படி கவர்னர் ஜெனரலவர்களுடைய அனுமதியை முன்னதாகப் பெற்றிருக்கிறபடியாலும், இதனால் விதிக்கபபடுகிறதென்னவென்றால் :—

1. இந்த ஆக்டை, 1923-ம்௵த்திய சென்னபட்டணத்து முத்திரைக் கடுதாசி (பின்னும் திருத்துவதற்கான) ஆக்டென்று சொல்லலாம்.

2. 1922-ம்௵த்திய சென்னபட்டணத்து முத்திரைக் கடுதாசி (திருத்துவதற்கான) ஆக்ட் 8-வது பிரிவில், '(1) குறிப்பிட்ட உட்பிரிவிற்கண்ட (b) அடையாளமிட்ட பகுதியில்' என்னும் வார்த்தைகளுக்கு பர்த்தியாக '(1) குறிப்பிட்ட உட்பிரிவில்' என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும்.

3. அதே ஆக்டின் I-A ஷெட்யூலில் அடியிற்கண்ட திருத்தங்கள் செய்யவேண்டும் :—

(a) 5-வது பகுதியைச் சேர்ந்த (a) குறிப்பிட்ட உட்பகுதியின் (ii) அடையாளமிட்ட பாகத்தில், 'ஒற்றையாக எழுதினால்' என்னும் கலத்தின்கீழ் '10-0-0' என்னும் எண்களுக்கு பர்த்தியாக '10-2-0' என்னும் எண்களை அமைத்துக்கொள்ளவேண்டும்.

(b) 5-வது பகுதியைச் சேர்ந்த (b) குறிப்பிட்ட உட்பகுதியில், 'சரியான முத்திரைத் தீர்வை' என்னும் தலைப்புள்ள கலத்திலே, 'தீர்வையில் பாதி' என்னும் வார்த்தைகளுக்குப் பிறகு அடியிற்கண்டதை அமைத்துக்கொள்ளவேண்டும் ; அதாவது :— 'காலணா முத்திரைத் தீர்வையை அரையணாவாகவும் முக்காலணாவை ஒரு அணாவாகவும் கணக்கிடவேண்டும்.'

(c) 50-வது பகுதியைச் சேர்ந்த (c) குறிப்பிட்ட உட்பகுதியின் (i) அடையாளமிட்ட பாகத்தில், 'இன்ன ஆதாரவுகள்' என்னும் தலைப்புள்ள கலத்திலே, 'ஐந்து ரூபாய்க்கு' என்னும் வார்த்தைகளுக்கு பர்த்தியாக 'எழு ரூபாய் எட்டணாவுக்கு' என்னும் வார்த்தைகளை அமைத்துக்கொள்ளவேண்டும்.

இந்த மசோதா ஆக்ட் பிறப்பதற்குண்டான ஹேதுக்களும் நோக்கங்களும்.

1922-ம்௵த்து 6-வது ஆக்டாகிய சென்னபட்டணத்து முத்திரைக் கடுதாசி (திருத்துவதற்கான) ஆக்டின் I-A ஷெட்யூலிலுள்ள சில பிழைகளைத் திருத்துவதே இந்த மசோதா ஆக்டின் உத்தேசமாகும்.

பகுதிகளைப்பற்றிய குறிப்புகள்.

பகுதி 2.—8-வது பிரிவில்கண்டிருக்கும் திருத்தமானது பிரதான ஆக்ட் 23-A பிரிவைச் சேர்ந்த (1) குறிப்பிட்ட உட்பிரிவுக்குச் சம்பந்தப்படுகிறபடியால், (b) என்னும் எழுத்தையும் நகவளைவுக் குறிகளையும் விட்டுவிட உத்தேசித்திருக்கிறது.

பகுதி 3 (a).—ஆட்சிப்பத்திரங்களைக் கட்டுவதற்காவது அடகு அல்லது அடமானத்துக்காவது சம்பந்தப்பட்ட உடன்படிக்கைகளுக்கு விதிக்கப்படும் தீர்வை நூற்றுக்கு 50 வீதம் உயர்த்தப்பட்டிருக்கிறது. ஆகவே, கடனானது 5,000 ரூபாய்க்கு மேற்பட்டும் 7,500 ரூபாய்க்கு மேற்படாமலும் இருந்தால், அதற்குத் தீர்வை - பழைய தீர்வையாகிய ரூ. 6-12-0 உடன் ரூ. 6-12-0 ல் நூற்றுக்கு 50 வீதமுள்ள தொகையைச் சேர்த்தால் கிடைக்கும் தொகையாகிய ரூ. 10-2-0 ஆக இருக்கவேண்டும்.

பகுதி 3 (b).—5-வது பகுதியைச் சேர்ந்த (b) குறிப்பிட்ட உட்பகுதியின்படி தீர்வை விதிக்கத்தக்க ஆதாரவுகளுக்கு காலணா மதிப்பும் முக்காலணா மதிப்புமுள்ள முத்திரைகள் வேண்டியிருக்கின்றன. இந்தப் பெயர் மதிப்புள்ள முத்திரைகள் இப்போது இல்லை. அவைகளைத் தயார்செய்து வெளிவிடுவதும் அவ்வளவு பிரயோசனகரமாகத் தோற்றவில்லை.

பகுதி 3 (c).—50-வது பகுதியைச் சேர்ந்த (c) குறிப்பிட்ட பகுதியின் (ii) அடையாளமிட்ட பாகத்தின்படி தீர்வையானது 5 ரூபாயிலிருந்து ரூ. 7-8-0 க்கு உயர்த்தப்பட்டிருக்கிறது. ஆனால், அது காரணமாக (c) குறிப்பிட்ட உட்பகுதியின் (i) அடையாளமிட்ட பாகத்தில் செய்யவேண்டிய திருத்தம் செய்யப்படாமல் விட்டுப்போயிற்று.

1922-ம்௵ ஜனவரி௴ 3௨. மஹம்மத் ஹபிபுல்லா.

ஆர். ராமசந்திர ராவ்,
கவர்ன்மெண்ட் ஸெக்ரெடரி,
லா (லெஜிஸ்லெடிவ்) டிபார்ட்மெண்ட்.

(A true translation)

C. N. SARAVANA MUDALIYAR,
Tamil Translator to Government.

MADRAS: PRINTED AND PUBLISHED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS.